# *கலாத்தியர்*
# *பாடம் 26 எல்லாரும் சபிக்கப்பட்டவர்கள்*

***கலாத்தியர் 3:10-14, நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்; நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத் தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே.***
***11 நியாயப்பிரமாணத்தினாலே ஒருவனும் தேவனிடத்தில் நீதிமானாகிறதில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது. ஏனெனில், விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே. 12 நியாயப்பிரமாணமோ***
***விசுவாசத்திற்குரியதல்ல; அவைகளைச் செய்கிற மனுஷனே அவைகளால் பிழைப்பான். 13 மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார். 14 ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக்குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று.***

வ *10, "எவனும் சபிக்கப்பட்டவன்."*

உலகளாவிய வாக்கியம். Universal statement.

***ரோமர் 3:23,***

***எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி,***

*இது போதகர்கள் சொல்வதற்கு கடினமான வார்த்தை. இந்த காலக்கட்டத்தில் நாம் போதகர்களிடத்தில் எதிர்ப்பார்ப்பது கர்த்தர் உங்களை நேசிக்கிறார், கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார் போன்ற உபதேசங்களே. ஆனால் அப்போஸ்தலனாகிய பவுல் வித்தியாசமாக கூற விரும்புகிறார்.*

*நவீன கால இறையியல், சுவிஷேத்திற்கு பலவிதமான அர்த்தங்களை கொடுக்கிறது*

- ✓ *கர்த்தர் அவர்களை ஆசிர்வதிக்க விரும்புகிறார்*
- ✓ *கர்த்தர் முடிவில்லா ஆசீர்வாதத்தை கொடுக்க காத்துக்கொண்டிருக்கிறார்*
- ✓ *கர்த்தர் அவர்களை மகிழ்விக்க விரும்பிருகிறார்*
- ✓ *கர்த்தர் அவர்கள் ஆரோக்கியமாக இருக்க விரும்புகிறார்*
- ✓ *கர்த்தர் அவர்களுக்கு பிரச்சனைகளில்லாத வெற்றிகரமான வாழ்க்கை அளிக்க விரும்புகிறார்*
- ✓ *கர்த்தர் அவர்களுடைய எண்ணங்கள் கனவுகளை நிறைவேற்றுவார்*

**இதுதான் *21* ஆம் நூற்றாண்டின் விளம்பர செய்தியாக இருக்கிறது.**

*பிரசங்கிப்பவர்கள் மக்களிடம் அவர்கள் சாபத்துக்குட்பட்டவர்கள் என்பதை கூறுவது இல்லை.*

*அவர்கள் சாத்தானால் சபிக்கப்படவில்லை!*
*ஆனால் கர்த்தராலேயே சபிக்கப்பட்டார்கள்!!*

*எப்போது அந்த சாபம் உணரப்படுமென்றால் நித்திய ஆக்கினை மற்றும் நித்தியசஞ்சலம் அடையும்போது உணரப்படும். அந்த ஆக்கினையிலிருந்து தப்பவும் முடியாது விடுதலை பெறவும் முடியாது.*

*உலகில் வாழ்கின்ற ஒவ்வொரு மனிதனும் பிறக்கும் போதே சபிக்கப்பட்டவனே. அந்த சாபம் நித்தியமானது மற்றும் நிரந்திரமானது.*
*இதுவே 10 ஆம் வசனத்தில் நாம் பார்க்கும் உண்மையாகும்.*

*இது கிறிஸ்தவத்தின் மறைக்கப்பட்ட உண்மை. வேதாகமத்தின் இந்த பகுதியை போதகர்கள் பேச விரும்புவதில்லை. ஏனெனில் இது மக்களை காயப்படுத்துகிறதாய் இருக்கிறது. அதனால் அவர்கள் உண்மையற்றவர்களாய் மெய்ப்பொருளை மறைத்து சுவிசேஷத்தை மிகவும் அருமையானதாய் காட்டுகிறார்கள்.*

## *எவனும் சபிக்கப்பட்டவன்.*

***சபிக்கப்படுதல் என்றால் என்ன?***
*கிரேக்க மொழியில் ‘கட்டரன் ‘.*
*இது ‘யுலோக்’ என்ற சொல்லின் எதிர்பதம். ‘யுலோக்’ என்ற சொல்லிற்கு ஆசிர்வதிக்கப்படுதல் என்று அர்த்தம்.*
The Greek word ‘***kataran’***.
It is the opposite of ***‘euloge’***, which is to be blessed.

*சபிக்கப்படுத்தல் என்பது ஆசிர்வதிக்கப்படுதல் என்பதற்கு எதிர்மறையானது.*

- *ஆசிர்வதிக்கப்படுபவர்களுக்கு அனைத்தும் நன்மையானதே கொடுக்கப்படும்*

- *சபிக்கப்படுபவர்களுக்கு அனைத்தும் தீமையானதே கொடுக்கப்படும்*

*சாபம் என்பது தீமை, மரணம், அழிவு, வலி, துன்பத்தை குறிக்கிறது. சபிக்கப்படுத்தல் என்பது புதிய ஏற்பாட்டின் படி வெறுக்கப்படுதல் மற்றும் வெட்கப்பட்டுப்போதல் அல்லது அழிவுக்கு ஏதுவானது.*

*பழைய ஏற்பாட்டிலே ஒரே பொருள் கொண்ட மூன்று வார்த்தைகள் கூறப்பட்டுள்ளது.*

*சபிக்கப்படுதல் என்பது ஒப்புக்கொடுக்கப்படுதல், அழிக்கப்படுதல், ஆக்கினைக்குள்ளாதல் ஆகியவற்றை குறிக்கிறது*

## ***சாபங்கள்:***

*வேதாகமம் சாபத்தை குறித்து பல காரியங்களை கூறுகிறது.*

*நாம் அறிந்த வண்ணமாக சாபங்கள் அளிக்கப்பட்டுள்ளன.*

1. *மனிதர்கள் மற்ற மனிதர்களுக்கு அளிக்கும் சாபங்கள்*
2. *தீமை செய்வதற்கு சாத்தனையும் பிசாசுகளையும் தூண்டிவிடும் சாபங்கள்*
3. *எல்லா காலங்களிலும் மந்திரத்தின் மூலம் தூண்டப்படும் சாபங்கள்*

*சாபங்கள் இருளின் ராஜ்யத்திற்குரியவைகள்.*
*இதை நாம் பழைய ஏற்பாட்டில் காண முடிகிறது.*

***எண்ணாகமம் 22:6, "அவர்கள் என்னிலும் பலவான்கள்; ஆகிலும், நீர் ஆசீர்வதிக்கிறவன் ஆசீர்வதிக்கப்பட்டவன், நீர் சபிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்று அறிவேன்; ஆதலால்,***

***நீர் வந்து, எனக்காக அந்த ஜனத்தைச் சபிக்கவேண்டும்; அப்பொழுது ஒருவேளை நான் அவர்களை முறிய அடித்து, அவர்களை இத்தேசத்திலிருந்து துரத்திவிடலாம் என்று சொல்லச்சொன்னான்."***

*பிலேயாம் ஒருவித சாபங்களின் ராஜாவாக காணப்படுகிறான்!*

*பிலேயாம் குறிசொல்லுகிறவனும் சூனியக்காரனுமாய் இருந்து, சாத்தானின் பிசாசுகளின் சாபங்களை மக்களின் மீது வர செய்து, அவர்கள் வாழ்க்கையில் சாத்தான் அழிவை கொண்டுவர காரணமாய் இருந்தான்.*

*கோலியாத் தாவீதை சபித்தது வீணாய்ப்போனது.*
*தாவீது தன் குமாரனாகிய அப்சலோமுக்கு தப்பி ஓடியபோது, சவுல் வீட்டு வம்சத்தானாயிருக்கிற கேராவின் குமாரனாகிய சீமேயி அவனை தூஷித்தான்*

*ஆகவே சாபங்கள் இருளின் ராஜ்யத்துக்குரியவைகள். கேடுள்ள மனிதர் அதை தங்களுக்குள்ளே கூறிக்கொள்ளுகிறார்கள்*

*நாம் இந்த வகை சாபங்களை பற்றி பேச போவது இல்லை.*

*நாம் இந்த வசனத்தை பார்த்து கர்த்தரின் சாபத்தை குறித்து தியானிக்க போகிறோம். இந்த சாபத்தை கர்த்தர் எல்லா மனிதர்களுக்கும் உரைக்கிறார்.*

*இயேசு இவ்விதமாய் சாபத்தை குறித்து கூறுகிறார்.*
***மத்தேயு 10:28, ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்.***

*கர்த்தருடைய சாபத்திற்கு நாம் பயப்பட வேண்டும். இந்த உண்மை அறிவிக்கப்பட வேண்டும்!!*

***அனைவரும் சபிக்கப்பட்டவர்கள் - இதன் அர்த்தம் என்ன?***

*பூமியில் வாழ்கிற அனைவரும் சபிக்கப்பட்டவர்கள், மரணத்திற்கு பின் நித்தியத்திலும் சபிக்கப்பட்டவர்களாய் இருப்பார்கள்.*

*இந்த சாபத்தின் செயல்பாடுகள் மற்றும் முடிவுகள் அளவிடப்படாத துன்பத்தை வருவிக்கும்.*

## ***எல்லாரும் சபிக்கப்பட்டவர்கள் என்று நாம் எப்படி அறிந்து கொள்ளுகிறோம்?***

*ஏனெனில் எல்லாரும் மரணத்தை சந்திக்கிறார்கள்.*

***எசேக்கியேல் 18:4, 20, இதோ, எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள்; தகப்பனின் ஆத்துமா எப்படியோ, அப்படியே மகனின் ஆத்துமாவும் என்னுடையது; பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும். 20 பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்; குமாரன் தகப்பனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை, தகப்பன் குமாரனுடைய அக்கிரமத்தைச் சுமப்பதுமில்லை; நீதிமானுடைய நீதி அவன்மேல்தான் இருக்கும், துன்மார்க்கனுடைய துன்மார்க்கமும் அவன் மேல்தான் இருக்கும்.***

***ரோமர் 6:23,***
***பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்.***

***வ10, நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்; நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டவைகளையெல்லாம் செய்யத்***

**தக்கதாக அவைகளில் நிலைத்திராதவன் எவனோ அவன் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறதே.**

*நியாயப்பிரமாணம் என்பது தேவனுடைய வார்த்தையை குறிக்கிறது.*

*நியாயப்பிரமாணத்தை பற்றி யோசுவா இவ்விதமாய் குறிப்பிடுகிறார்.*

***யோசுவா 1:8, இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவை களின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக்கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாகவும் நடந்துகொள்ளுவாய்.***

*நியாயப்பிரமாணம் அதாவது கர்த்தருடைய வார்த்தையை மீறுவது சாபத்தை கொண்டு வரும்.*

*எல்லாருமே சபிக்கப்பட்டவர்கள். ஏனெனில் எல்லாரும் நியாயப்பிரமாணத்தை மீறினவர்கள்.*


*இதை நாம் மறவாமலிருக்க கர்த்தர் நமக்கு வரைப்படம் மூலம் விளக்குகிறார்.*

*இஸ்ரவேல் புத்திரர் எகிப்தின் நானூறு வருஷ அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாகி வாக்குத்தத்தம் பண்ணின தேசத்திற்கு வந்தார்கள். இப்பொழுது இவர்கள் அனைவரும் பன்னிரண்டு கோத்திரங்களும் வாக்குத்தத்தம் பண்ணின தேசத்தில் இருக்கிறார்கள். வாக்குத்தத்தம் பண்ணின தேசத்தில் அவர்களுக்கான நிலங்கள் பங்கிடப்பட்டு ஒதுக்கப்பட்டது.*

*மீண்டும், இப்போது கர்த்தர், உபாகமம் புத்தகத்தில், தம்முடைய நியாயப்பிரமாணத்தை அவர்களுக்குக் கொடுத்து, அவர்களை தேவனுடைய நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்ப்படியும்படி கட்டளையிட்டார்*

*எனவே புதிய ஏற்பாட்டில் கூறப்பட்டுள்ள சமாரியா பகுதியில் கர்த்தர் ஒரு கூடுகையை ஏற்படுத்துகிறார்.*

*சீகேம் என்ற ஒரு நகரம் உள்ளது, அந்த நகரம் சீகேம் இரண்டு மலைகளுக்கு இடையில் மிகக் குறுகிய பள்ளத்தாக்கில் அமைந்திருக்கிறது.*




*ஒரு மலை கெரிசீம் மலை மற்றொரு மலை ஏபால் மலை.*

*இந்த இடத்தில தான் கர்த்தர் கூடுகையை ஏற்படுத்துகிறார்.*

**உபாகமம் *27:9-14,* பின்னும் மோசே, லேவியராகிய ஆசாரியர்களும்கூட இருக்கையில், இஸ்ரவேலர் எல்லாரையும் நோக்கி: இஸ்ரவேலே, கவனித்துக் கேள்; இந்நாளிலே உன் தேவனாகிய கர்த்தருக்கு ஜனமானாய். *10* ஆகையால் நீ உன் தேவனாகிய கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து, இன்று நான் உனக்கு விதிக்கிற அவருடைய கற்பனைகளின்படியும்**

***அவருடைய கட்டளைகளின்படியும் செய்வாயாக என்று சொன்னான். 11 மேலும் அந்நாளிலே மோசே ஜனங்களை நோக்கி: 12 நீங்கள் யோர்தானைக் கடந்தபின்பு, ஜனங்கள் ஆசீர்வதிக்கப்படும்படி கெரிசீம் மலையில் சிமியோன், லேவி, யூதா, இசக்கார், யோசேப்பு, பென்யமீன் என்னும் கோத்திரங்கள் நிற்கவேண்டும். 13 சாபங்கூறப்படும்பொருட்டு ஏபால்மலையில் ரூபன், காத், ஆசேர், செபுலோன், தாண், நப்தலி என்னும் கோத்திரங்கள் நிற்கவேண்டும். 14 அப்பொழுது லேவியர் உரத்த சத்தமிட்டு இஸ்ரவேல் மனிதர் எல்லாரையும் பார்த்து:***

- ❖ *ஆறு கோத்திரங்கள் கெரிசீம் மலையில், மற்றும்*
- ❖ *ஆறு கோத்திரங்கள் ஏபால் மலையில்*

- ✓ *கெரிசீம் ஆசீர்வாதத்தை குறிக்கிறது*
- ✓ *ஏபால் சாபத்தை குறிக்கிறது*

*கர்த்தர் ஆசீர்வாதத்தையும் அளிக்க போகிறார் சாபத்தையும் அளிக்க போகிறார்.*

*28 ஆம் அதிகாரத்தில் ஆசீர்வாதத்தை காண்கிறோம். ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய் என்ற வார்த்தை பல முறை சொல்லப்படுகிறது.*

*ஆனால் ஆசீர்வாதத்திற்கு எதிரான சாபமானது இந்த இரண்டு அதிகாரங்களில் மிகுதியாக காணப்படுகிறது.*

***உபாகமம் 27:15-26, கர்த்தருக்கு அருவருப்பான காரியமாகிய தொழிலாளிகளுடைய கைவேலையால் செய்யப்பட்டதும் வார்ப்பிக்கப்பட்டதுமான யாதொரு விக்கிரகத்தை உண்டு பண்ணி ஒளிப்பிடத்திலே வைக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; அதற்கு ஜனங்களெல்லாரும் பிரதியுத்தரமாக***

*ஆமென் என்று சொல்லக்கடவர்கள். 16. தன் தகப்பனையும் தன் தாயையும் தூஷிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்கள்; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள். 17. பிறனுடைய எல்லைக்குறியை ஒற்றிப்போடுகிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள். 18. குருடனை வழிதப்பச்செய்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள். 19. பரதேசி திக்கற்றவன் விதவை ஆகிய இவர்களுடைய நியாயத்தைப் புரட்டுகிறவன் சபிக்கப்படவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள். 20. தன் தகப்பன் மனைவியோடே சயனிக்கிறவன், தன் தகப்பனுடைய மானத்தைத் திறந்தபடியினாலே, சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள். 21. யாதொரு மிருகத்தோடே புணர்ச்சிசெய்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள். 22. தன் தகப்பனுக்காவது தாய்க்காவது குமாரத்தியாகிய தன் சகோதரியோடே சயனிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள். 23. தன் மாமியோடே சயனிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள். 24. ஒளிப்பிடத்திலே பிறனைக் கொலைசெய்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள். 25. குற்றமில்லாதவனைக் கொலைசெய்யும்படி பரிதானம் வாங்குகிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள். 26. இந்த நியாயப் பிரமாண வார்த்தைகளையெல்லாம் கைக்கொண்டு நடவாதவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்.*

*இங்கு கூறப்படும் அனைவரும் கர்த்தருடைய கற்பனை எதையாகிலும் மீறுகிறதால் சாபத்தை பெற்றுக் கொள்ளுகிறார்கள். இவைகள் பிரதமான கட்டளைகள். இன்னும் பல கற்பனைகள் உள்ளன!!*
*26 ஆம் வசனத்தில் நீங்கள் பார்க்கலாம், "***இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளையெல்லாம் கைக்கொண்டு நடவாதவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்."**

*இவ்வாறு அந்த சாபம் உறுதியாக்கப்படுகிறது.*

***உபாகமம் 28:15-20, இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய எல்லாக் கற்பனைகளின்படியும் கட்டளைகளின்படியும் நடக்கக் கவனமாயிருக்கிறதற்கு, அவர் சத்தத்திற்குச் செவிகொடாதேபோவாயாகில், இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து, உனக்குப் பலிக்கும். 16. நீ பட்டணத்திலும் சபிக்கப்பட்டிருப்பாய், வெளியிலும் சபிக்கப்பட்டிருப்பாய். 17. உன் கூடையும், மாப்பிசைகிற உன் தொட்டியும் சபிக்கப்பட்டிருக்கும். 18. உன் கர்ப்பத்தின் கனியும், உன் நிலத்தின் கனியும், உன் மாடுகளின் பெருக்கமும், உன் ஆடுகளின் மந்தைகளும் சபிக்கப்பட்டிருக்கும். 19. நீ வருகையிலும் சபிக்கப் பட்டிருப்பாய், நீ போகையிலும் சபிக்கப்பட்டிருப்பாய். 20. என்னைவிட்டு விலகி நீ செய்துவருகிற உன் துர்க்கிரியைகளினிமித்தம் சீக்கிரத்தில் கெட்டுப்போய் அழியுமட்டும், நீ கையிட்டுச் செய்கிறதெல்லா வற்றிலும் கர்த்தர் உனக்குச் சாபத்தையும் சஞ்சலத்தையும் கேட்டையும் வரப்பண்ணுவார்.***

***உபாகமம் 28:45, உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு விதித்த அவருடைய கற்பனைகளையும் கட்டளைகளையும் கைக்கொள்ளும்படி, நீ அவர் சத்தத்திற்குச்***

***செவிகொடாதபடியினால், இந்தச் சாபங்கள் எல்லாம் உன்மேல் வந்து, நீ அழியுமட்டும் உன்னைத்தொடர்ந்து பிடித்து,***

***உபாகமம் 28:58-59, உன் தேவனாகிய கர்த்தர் என்னும் மகிமையும் பயங்கரமுமான நாமத்திற்குப் பயப்படும்படிக்கு, நீ இந்தப் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற இந்த நியாயப்பிரமாண வார்த்தைகளின்படியெல்லாம் நடக்கக் கவனமாயிராவிட்டால், 59. கர்த்தர் நீங்காத பெரிய வாதைகளாலும் நீங்காத கொடிய ரோகங்களாலும் உன்னையும் உன் சந்ததியையும் அதிசயமாய் வாதித்து,***

***உபாகமம் 28:67, நீ பயப்படும் உன் இருதயத்தின் திகிலினாலும், உன் கண்கள் காணும் காட்சியினாலும், விடியற்காலத்தில் எப்பொழுது சாயங்காலம் வருமோ என்றும், சாயங்காலத்தில், எப்பொழுது விடியற்காலம் வருமோ என்றும் சொல்லுவாய்.***

***இதிலிருந்து நீங்கள் என்ன அறிந்து கொள்ளுகிறீர்கள் ?***

- ✓ *நீங்கள் எனக்குக் கீழ்ப்படிந்தால், நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.*
- ✓ *எனக்குக் கீழ்ப்படியாமற்போனால், நீங்கள் சபிக்கப்படுவீர்கள்.*

*மற்ற வரலாற்றை நாம் நன்கு அறிவோம்.*
*இஸ்ரவேலர், ''ஆமென், ஆமென், ஆமென்'' என்று கூறி தங்கள் கீழ்ப்படிதலை உறுதிப்படுத்தினர்.*

*யாத்திராகமம் 24 இலும் இதையே செய்தார்கள்.*

*ஆனால் நூற்றாண்டுகள் கடந்த போது அவர்கள் கர்த்தரை விட்டு திரும்பினர்*

- *அவர்கள் கர்த்தரை புறக்கணித்தனர்*
- *கர்த்தர் எதை செய்தல் சபிக்கப்படுவீர்கள் என்று சொன்னாரோ அதேயே செய்தார்கள்*
- *அவர்கள் வேசித்தனம் பண்ணினார்கள்*
- *தங்களுக்கு சுரூபங்களை செய்து அதை வணங்கினார்கள்*
- *அவர்கள் எல்லைகளை தகர்த்தார்கள்*
- *அவர்கள் சீர்கெட்டுப்போனார்கள்*
- *தங்கள் அயலானை கொலை செய்தார்கள்*
- *கர்த்தர் கொடுத்த எல்லா நியாயப்பிரமானத்தையும் மீறினார்கள்*

*கர்த்தர் அவர்களை தண்டித்தார்!*
*அடுத்த தலைமுறைகளுக்கும் அந்த சாபம் தொடர்ந்தது. எல்லா தலைமுறையினர் தங்கள் பாவங்களுக்காக சபிக்கப்பட்டு நரகத்தில் நித்திய ஆக்கினைக்குள்ளாக்கப் பட்டனர்.*

*சீகேமிலே கூடின எண்ணூறு ஆண்டுகளுக்கு பிறகு, அவர்கள் பாபிலோனுக்கு சிறைபிடித்து போகப்பட்டார்கள். இவ்வாறு கர்த்தரின் கோபாக்கினை தேசத்தின் மேல் வந்தது.*

*இதுவே கீழ்படியாத தேசத்தின் மீது கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு.*

*இது ஏன் நடந்தது என்று கர்த்தருடைய இருதயத்தில் உள்ளதை புரிந்து கொள்ளும் ஞானத்தை பெற்றோம்,*

*கர்த்தருடைய சாபத்தை புரிந்து கொள்ள இதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்*

*எரேமியா 11:1-17, கர்த்தராலே எரேமியாவுக்கு உண்டான வசனம். 2. நீங்கள் கேட்டு யூதாவின் மனுஷருக்கும் எருசலேமின் குடிகளுக்கும் சொல்லவேண்டிய உடன்படிக்கையின் வார்த்தைகளாவன: 3. என் சத்தத்தைக் கேட்டு, நான் உங்களுக்குக் கற்பிக்கிறபடியே எல்லாக் காரியங்களையும் செய்யுங்கள்; அப்பொழுது நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருப்பேன்; 4. நான் உங்கள் பிதாக்களை இருப்புக்காளவாயாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின நாளிலே அவர்களுக்குக் கற்பித்த இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளைக் கேளாத மனுஷன் சபிக்கப்பட்டவனென்று, இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உரைக்கிறார் என்று அவர்களுக்குச் சொல்லு. 5. இன்றையதினம் இருக்கிறபடி, பாலும் தேனும் ஓடுகிற தேசத்தை உங்கள் பிதாக்களுக்குக் கொடுப்பேனென்று நான் அவர்களுக்கு இட்ட ஆணையை நான் திடப்படுத்தும்படி இப்படி ஆகும் என்றார்; அதற்கு நான் பிரதியுத்தரமாக: அப்படியே ஆகக் கடவது கர்த்தாவே என்றேன். 6. அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: நீ யூதாவின் பட்டணங்களிலும் எருசலேமின் வீதிகளிலும் இந்த வார்த்தைகளையெல்லாம் கூறி: இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளை நீங்கள் கேட்டு, அவைகளின்படியே செய்யுங்கள். 7. நான் உங்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின நாள்முதல், இந்நாள்மட்டும் நான் அவர்களுக்குத் திடச்சாட்சியாய் என் சத்தத்தைக் கேளுங்களென்று ஏற்கனவே சாட்சி விளங்கத்தக்கவிதமாய் எச்சரித்துவந்தேன். 8. ஆனாலும் அவர்கள் கேளாமலும், தங்கள் செவியைச் சாயாமலும் போய், அவரவர் தம்தம் பொல்லாத இருதயகடினத்தின்படி நடந்தார்கள்; ஆதலால் நான் அவர்கள் செய்யும்படி கட்டளையிட்டதும், அவர்கள் செய்யாமற்போனதுமான இந்த உடன்படிக்கையின் வார்த்தைகளையெல்லாம் அவர்களுக்குப் பலிக்கப்பண்ணுவேன் என்று சொல் என்றார்.*

*9. பின்னையும் கர்த்தர் என்னை நோக்கி: யூதாவின் மனுஷருக்குள்ளும் எருசலேமின் குடிகளுக்குள்ளும் ஒரு கட்டுப்பாடு காணப்படுகிறது. 10. அவர்கள் என் வார்த்தைகளைக் கேட்கமாட்டோமென்று அந்நிய தேவர்களைச் சேவிக்க அவைகளைப் பின்பற்றி, தங்களுடைய முன்னோர்களின் அக்கிரமங்களுக்குத் திரும்பினார்கள்; நான் தங்கள் பிதாக்களோடே பண்ணின உடன்படிக்கையை இஸ்ரவேல் குடும்பத்தாரும் யூதா குடும்பத்தாரும் மீறிப்போட்டார்கள். 11. ஆகையினால் இதோ, அவர்கள் தப்பித்துக்கொள்ளமாட்டாத தீங்கை அவர்கள்மேல் வரப்பண்ணுவேன்; அப்பொழுது என்னை நோக்கிக் கூப்பிடுவார்கள்; நான் அவர்களைக் கேளாதிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். 12. அப்பொழுது யூதா பட்டணங்களின் மனுஷரும், எருசலேமின் குடிகளும் போய்த் தாங்கள் தூபங்காட்டியிருந்த தேவர்களை நோக்கிக் கூப்பிட்டும், அவைகள் அவர்களுடைய ஆபத்துக்காலத்தில் அவர்களை இரட்சிப்பதில்லை. 13. யூதாவே, உன் பட்டணங்களின் இலக்கமும் உன் தேவர்களின் இலக்கமும் சரி; எருசலேமுடைய வீதிகளின் இலக்கமும், நீங்கள் பாகாலுக்குத் தூபங்காட்டும்படி அந்த இலச்சையான காரியத்துக்கு ஸ்தாபித்த பீடங்களின் இலக்கமும் சரி. 14. ஆதலால் நீ இந்த ஜனத்துக்காக விண்ணப்பம்பண்ணவேண்டாம், அவர்களுக் காக மன்றாடவும் கெஞ்சவும்வேண்டாம்; அவர்கள் தங்கள் ஆபத்தினிமித்தம் என்னை நோக்கிக் கூப்பிடுங்காலத்திலே நான் அவர்களைக் கேளாதிருப்பேன். 15. துர்ச்சனரோடு மகா தீவினைசெய்யும்போது, என் பிரியமானவளுக்கு என் வீட்டில் என்ன இருக்கிறது? பரிசுத்த மாம்சத்தை உன்னைவிட்டுத் தாண்டிப்போகப்பண்ணுவார்கள்; உன் பொல்லாப்பு நடக்கும்போது நீ களிகூருகிறாயே. 16. நல்ல கனி உண்டாயிருக்கிற நேர்த்தியும் பச்சையுமான ஒலிவமரமென்னும் பேரைக் கர்த்தர் உனக்கு இட்டார்; ஆனால் மகா அமளியின் சத்தமாய் அதைச் சுற்றிலும் நெருப்பைக்*

***கொளுத்துகிறார், அதின் கொம்புகள் முறிக்கப்பட்டது. 17. பாகாலுக்குத் தூபங்காட்டுகிறதினாலே எனக்குக் கோபமுண்டாக்க இஸ்ரவேல் குடும்பத்தாரும், யூதா குடும்பத்தாரும் தங்களுக்குக் கேடாகச் செய்த பொல்லாப்பினிமித்தம் உன்மேல் தீங்கை வரப்பண்ணுவேன் என்று உன்னை நாட்டின சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.***

*எகிப்தில் காணப்பட்ட துன்பத்தினால் அந்த தேசம் இருப்புக்காளாவாய் எனப்பட்டது.*

*கர்த்தர் திரும்பவும் உபாகமம் 27, 28 - எண்ணூறு வருடங்களுக்கு முன்னே செல்கிறார்.*

*கர்த்தரிடத்திலிருந்து சாபம் வந்ததினால் பாபிலோனியர் எருசலேம் நகரத்தில் படையெடுத்து, யூதர்களை கொலை செய்து, அவர்களை சிறைபிடித்து கொண்டு போனார்கள். வட பகுதி ஏற்கனவே சிறைப்பட்டு இருந்தது இப்போது தென் பகுதி யூதா மற்றும் எருசலேம் பகுதியும் பாபியலோனியர்களால் சிறைபிடிக்கப்பட்டது.*

*கர்த்தரால் சபிக்கப்பட்டு, கர்த்தர் சொன்னதெல்லாம் நிறைவேறினது. ஏனெனில் அவர்கள் கர்த்தர் சொன்னதை செய்யவில்லை.*

***எரேமியா 17:5-7, மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக் கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன் என்று கர்த்தர் சொல்லுகிறார். 6. அவன் அந்தரவெளியில் கறளையாய்ப்போன செடியைப்போலிருந்து, நன்மைவருகிறதைக் காணாமல், வனாந்தரத்தின் வறட்சியான இடங்களிலும், குடியில்லாத உவர்நிலத்திலும் தங்குவான்.***

***7. கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்.***

*உபாகமம் புத்தகத்தில் சாபங்கள் சொல்லப்பட்டாலும், பழைய ஏற்பாடு முழுவதும் சாபங்கள் கூறப்பட்டுள்ளது. பாவம் செய்கிற மனிதர்கள் மேல் திரும்ப திரும்ப சாபங்கள் கூறப்படுகிறது.*
*சங்கீத புத்தகம் முழுவதும் சாபங்கள் கூறப்பட்டிருக்கிறது. துன்மார்க்கனுக்கு விரோதமாக பல சாபங்கள் சங்கீதத்தில் உள்ளது. சில சங்கீதத்தில், நம்மை தாக்கும் பகை அக்கினி தழலில் இருந்து வரும் வெப்பம் போன்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.*

*சில வேத பண்டிதர்கள் முப்பத்தொன்பது சங்கீதங்கள் தான் சாபத்தை கூறுகிறது என்கிறார்கள்.*

*1974 ல் ஒரு ஆங்கில ஆய்வு குழு என்பதினான்கு சங்கீதங்கள் கிறிஸ்தவர்கள் பாடுவதற்கு ஏற்றவை அல்ல என கூறியுள்ளது*

*ஆனால் நினைவு கூறுங்கள் இந்த சங்கீதங்கள் பக்தியோடு எழுதப்பட்டதும் நியாயமானவைகளுமே. அவைகள் ஆறுதலின் சங்கீதங்களாக நியாயப்படுத்தப்படுகிறது. ஏனெனில் கர்த்தர் பாவிகளேயே தொந்தரவு செய்கிறார்.*

*கர்த்தர் பாவிகளை முற்றும் தொந்தரவு செய்ய விரும்புகிறார். அவர்கள் சபிக்கப்பட்டவர்கள் என்பதை உணரவேண்டும் என நினைக்கிறார்.*

***மக்கள் சபிக்கப்படுத்தலிலும், துன்பம் அடைவதிலும் பிரிப்படுகிறவரா கர்த்தர்?***
***இல்லை***

***எசேக்கியேல் 33:11, கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால்: நான் துன்மார்க்கனுடைய மரணத்தை விரும்பாமல், துன்மார்க்கன் தன் வழியைவிட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறேன் என்று என் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; இஸ்ரவேல் வம்சத்தாரே, உங்கள் பொல்லாத வழிகளைவிட்டுத் திரும்புங்கள், திரும்புங்கள்; நீங்கள் ஏன் சாகவேண்டும் என்கிறார் என்று அவர்களோடே சொல்லு.***

*எரேமியா, எசேக்கியேல், ஏசாயா போன்ற தீர்க்கதரிசிகளின் கண்களால் கர்த்தர் கண்ணீர் விடுகிறார்.*

*கர்த்தர் இயேசுவின் கண்களின் மூலமும் கண்ணீர் விடுகிறார். இயேசு எருசலேமை சபித்த பின்பு எருசலேமுக்காக கண்ணீர் விடுகிறார்.*

***லூக்கா 19:41-44, அவர் சமீபமாய் வந்தபோது நகரத்தைப்பார்த்து, அதற்காகக் கண்ணீர்விட்டழுது, 42. உனக்குக் கிடைத்த இந்த நாளிலாகிலும் உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாயிருக்கும், இப்பொழுதோ அவைகள் உன் கண்களுக்கு மறைவாயிருக்கிறது. 43. உன்னைச் சந்திக்குங்காலத்தை நீ அறியாமற்போனபடியால், உன் சத்துருக்கள் உன்னைச் சூழ மதில்போட்டு, உன்னை வளைந்துகொண்டு, எப்பக்கத்திலும் உன்னை நெருக்கி, 44. உன்னையும் உன்னிலுள்ள உன் பிள்ளைகளையும் தரையாக்கிப்போட்டு, உன்னிடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்குச் செய்யும் நாட்கள் வரும் என்றார்.***

***தீர்க்கதரிசி எரேமியா சபிக்கிறார்.***

***எரேமியா 19:3-9, நீ அவர்களை நோக்கி: யூதாவின் ராஜாக்களே, எருசலேமின் குடிகளே, கர்த்தருடைய வார்த்தைகளைக்***

*கேளுங்கள்; இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்: இதோ, நான் இந்த ஸ்தலத்தின்மேல் ஒரு பொல்லாப்பை வரப்பண்ணுவேன்; அதைக் கேட்கிற யாவருடைய காதுகளிலும் அது தொனித்துக்கொண்டிருக்கும். 4. அவர்கள் என்னை விட்டுவிட்டு, இந்த ஸ்தலத்தை அந்நிய ஸ்தலமாக்கி, தாங்களும், தங்கள் பிதாக்களும், யூதாவின் ராஜாக்களும், அறியாதிருந்த அந்நிய தேவர்களுக்கு அதிலே தூபங்காட்டி, இந்த ஸ்தலத்தைக் குற்றமில்லாதவர்களின் இரத்தத்தினாலே நிரப்பினபடியினாலும், 5. தங்கள் பிள்ளைகளைப் பாகாலுக்குத் தகனபலிகளாகத் தகனிக்கும்படி பாகாலின் மேடைகளைக் கட்டினபடியினாலும் இப்படிவரப் பண்ணுவேன்; இவைகளை நான் கற்பித்ததுமில்லை, சொன்னதுமில்லை, இவைகள் என் இருதயத்தில் தோன்றினதுமில்லை. 6. ஆகையால், இதோ, நாட்கள்வரும், அப்பொழுது இந்த ஸ்தலம் தோப்பேத்தென்றும், இன்னோமுடைய குமாரனின் பள்ளத்தாக்கென்றும் இனிச் சொல்லப்படாமல், சங்காரப்பள்ளத்தாக்கென்று சொல்லப்படும். 7. அப்பொழுது நான் யூதாவுக்கும் எருசலேமுக்கும் கொண்டிருந்த ஆலோசனையை இந்த ஸ்தலத்திலே வெறுமையாக்கி, அவர்கள் சத்துருக்களுக்கு முன்பாக அவர்களைப் பட்டயத்தினாலும், அவர்கள் பிராணனை வாங்கத்தேடுகிறவர்களின் கையினாலும் விழப்பண்ணி, அவர்கள் பிரேதங்களை ஆகாயத்துப் பறவைகளுக்கும், பூமியின் மிருகங்களுக்கும் இரையாகக்கொடுத்து, 8. இந்த நகரத்தைப் பாழாக்கவும், கூச்சலிட்டு நிந்திக்கிற நிந்தையாகவும் வைப்பேன்; அதைக் கடந்துபோகிறவன் எவனும் பிரமித்து, அதின் எல்லா வாதைகளினிமித்தமும் ஈசலிடுவான். 9. அவர்களுடைய சத்துருக்களும் அவர்கள் பிராணனை வாங்கத் தேடுகிறவர்களும், அவர்களை இறுகப்பிடிக்கப்போகிற முற்றிக்கையிலும் இடுக்கத்திலும், நான் அவர்களைத் தங்கள்*

***குமாரரின் மாம்சத்தையும் தங்கள் குமாரத்திகளின் மாம்சத்தையும் தின்னப்பண்ணுவேன்; அவனவன் தனக்கு அடுத்தவனுடைய மாம்சத்தைத் தின்பான் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று நீ சொல்லி,***

*தீர்க்கதரிசி நாகூம் மிகவும் கொடூரமான சாபத்தை நினிவேயில் உள்ள அவிசுவாசிகளுக்கு அளிக்கிறார்*

***நாகூம் 1:2-6, கர்த்தர் எரிச்சலுள்ளவரும் நீதியைச் சரிக்கட்டுகிறவருமான தேவன்; கர்த்தர் நீதியைச் சரிக்கட்டுகிறவர், உக்கிரகோபமுள்ளவர்; கர்த்தர் தம்முடைய சத்துருக்களுக்குப் பிரதிபலன் அளிக்கிறவர், அவர் தம்முடைய பகைஞருக்காகக் கோபத்தை வைத்துவைக்கிறவர். 3. கர்த்தர் நீடிய சாந்தமும், மிகுந்த வல்லமையுமுள்ளவர்; அவர்களை ஆக்கினையில்லாமல் தப்புவிக்க மாட்டார்; கர்த்தருடைய வழி சுழல்காற்றிலும் பெருங் காற்றிலும் இருக்கிறது; மேகங்கள் அவருடைய பாதத்துக்குள்ளாயிருக்கிறது. 4. அவர் சமுத்திரத்தை அதட்டி, அதை வற்றிப்போகப்பண்ணி, சகல ஆறுகளையும் வறட்சியாக்குகிறார். பாசானும் கர்மேலும் சோர்ந்து, லீபனோனின் செழிப்பு வாடிப்போகும். 5. அவர் சமுகத்தில் பர்வதங்கள் அதிர்ந்து மலைகள் கரைந்துபோகும்; அவர் பிரசன்னத்தினால் பூமியும் சக்கரமும் அதில் குடியிருக்கிற அனைவரோடும் எடுபட்டுப்போம். 6. அவருடைய கோபத்துக்கு முன்பாக நிற்பவன் யார்? அவருடைய உக்கிரகோபத்திலே தரிப்பவன் யார்? அவருடைய எரிச்சல் அக்கினியைப்போல இறைக்கப்படுகிறது; அவராலே கன்மலைகள் பேர்க்கப்படும்.***

*ஏசாயா தீர்க்கதரிசி வார்த்தை உரைத்தார், அது பாபிலோனுக்கு விரோதமான சாபம்.*

***ஏசாயா 13:9, & 16, இதோ, தேசத்தைப் பாழாக்கி, அதின் பாவிகளை அதிலிருந்து அழிப்பதற்காகக் கர்த்தருடைய நாள் கடூரமும், மூர்க்கமும், உக்கிரகோபமுமாய் வருகிறது.***
***16 அவர்கள் குழந்தைகள் அவர்கள் கண்களுக்கு முன்பாக மோதியடிக்கப்படும்; அவர்கள் வீடுகள் கொள்ளையிடப் படும்; அவர்கள் மனைவிகள் அவமானப்படுவார்கள்.***

*நினிவே மற்றும் பாபிலோன் நகரங்கள் கொடூரமும் இரக்கமற்றதாயும் இருந்தது. அதனால் அங்குள்ள மக்கள் மேல் சொல்லப்படாத துயரம் மற்றும் கர்த்தருடைய சாபமும் தண்டனையும் வந்தது.*

*பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டது போல இந்த சாபங்கள் இஸ்ரவேலுக்கோ அல்லது மற்ற தேசமோ பட்டணத்திற்கு மட்டும் அல்ல.*

***ரோமர் 1:18, சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.***

***இதன் சுருக்கம்***
*சத்தியம் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது,*
*கர்த்தருடைய கற்பனைகள் நம்முடைய இருதயத்தில் எழுதப்பட்டுள்ளது,*

*ஆனால் எல்லா மனிதர்கள் உண்மையை ஒடுக்குகிறர்கள் தேவ பக்தியின்றி துன்மார்க்க வழியில் நடக்கிறார்கள்.*
*அவர்களுக்கு எதிரான கர்த்தருடைய கோபம் பரலோகத்திலிருந்து வெளிப்படும்!*
*வெளிப்படுத்துதலில் சொல்லப்பட்ட உபத்திரவ காலத்தில் ரத்த சாட்சிகள் வந்து கர்த்தரை நோக்கி கூப்பிட்டார்கள்*

***வெளி 6:10, அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர் களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்.***

*இறுதி பாபிலோனான அந்திகிறிஸ்துவின் இறுதி ராஜ்யத்தின் புகையை நாம் காண்கிறோம்.*

***வெளி 18:18-19, அவள் வேகிறதினால் உண்டான புகையைப் பார்த்து: இந்த மகா நகரத்திற்கொப்பான நகரம் உண்டோ என்று சத்தமிட்டு, 19. தங்கள் தலைகள்மேல் புழுதியைப்போட்டுக்கொண்டு: ஐயையோ, மகா நகரமே! சமுத்திரத்திலே கப்பல்களையுடைய அனைவரும் இவளுடைய உச்சிதமான சம்பூரணத்தினால் ஐசுவரியவான்களானார்களே! ஒரு நாழிகையில் இவள் பாழாய்ப்போனாளே! என்று அழுது துக்கித்து ஓலமிடுவார்கள்.***

*அதுவே கிறிஸ்துவின் வருகையில் காணப்படும் அழிவு, அந்திகிறிஸ்துவின் ராஜ்ஜியத்தின் அழிவு.*

***கர்த்தருடைய பிள்ளைகளின் பதில் என்னவாக இருக்கும்?***

***வெளி 18:20, பரலோகமே! பரிசுத்தவான்களாகிய அப்போஸ்தலர்களே! தீர்க்கதரிசிகளே! அவளைக்குறித்துக் களிகூருங்கள். உங்கள் நிமித்தம் தேவன் அவளை நியாயந்தீர்த்தாரே! என்று தூதன் சொன்னான்.***

*அடுத்த அதிகாரத்தில் பரலோகத்தை பற்றி காண்கிறோம்.*

***வெளி 19:1-3, இவைகளுக்குப்பின்பு, பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம் இடுகிற ஆரவாரத்தைக் கேட்டேன். அவர்கள்: அல்லேலூயா, இரட்சணியமும் மகிமையும் கனமும் வல்லமையும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியது;***

***அவருடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள். 2. தன் வேசித்தனத்தினால் பூமியைக்கெடுத்த மகா வேசிக்கு அவர் நியாயத்தீர்ப்புக்கொடுத்து, தம்முடைய ஊழியக்காரரின் இரத்தத்திற்காக அவளிடத்தில் பழிவாங்கினாரே என்றார்கள். 3. மறுபடியும் அவர்கள்: அல்லேலூயா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள். அவளுடைய புகை என்றென்றைக்கும் எழும்புகிறது என்றார்கள்.***

*கர்த்தர் இறுதியில் சாபத்தை அழிக்கும் போது அல்லேலூயா துதி பரலோகத்தில் கேட்கும்.*

***ஏன்?***

*நாம் மக்களுக்கு நரகத்தை விரும்பாமல், கர்த்தருடைய மகிமையை விரும்புகிறோம்.*

*பூமியிலும் பரலோகத்திலும் மீட்கப்பட்ட நாம், கர்த்தரை கனப்படுத்தவும், கிறிஸ்துவை மகிமைப்படுத்தவும் , பாவிகள் மனந்திருந்தவும் , சாபத்திற்கு தப்பவும் விரும்ப வேண்டும்.*

*நம்முடைய கர்த்தராகிய இயேசு வேறுபட்டவர் அல்ல.*

***மத்தேயு 25:41, அப்பொழுது, இடதுபக்கத்தில் நிற்கிறவர்களைப்பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்.***

*இதுவே பெரிய எச்சரிக்கையும் சாபத்தின் உண்மையும் ஆகும். ஏசுவும் தன்னுடைய ஊழியத்தில் ஆசீர்வாதத்தையும் கூறினார் சாபங்களையும் கூறினார்.*
*அவர் கோராசின் மற்றும் பெத்சாயிதா, கப்பர்நகூமை சபித்தார்.*

*லூக்கா 10:13-16, கோராசீன் பட்டணமே, உனக்கு, ஐயோ, பெத்சாயிதா பட்டணமே, உனக்கு ஐயோ, உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும் சீதோனிலும் செய்யப்பட்டிருந்ததானால், அப்பொழுதே இரட்டுடுத்தி, சாம்பலில் உட்கார்ந்து, மனந்திரும்பியிருப்பார்கள். 14. நியாயத் தீர்ப்புநாளில் உங்களுக்கு நேரிடுவதைப் பார்க்கிலும், தீருவுக்கும் சீதோனுக்கும் நேரிடுவது இலகுவாயிருக்கும். 15. வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய் என்று சொல்லி, 16. சீஷரை நோக்கி: உங்களுக்குச் செவிகொடுக்கிறவன் எனக்குச் செவிகொடுக்கிறான், உங்களை அசட்டைபண்ணுகிறவன் என்னை அசட்டைபண்ணுகிறான், என்னை அசட்டை பண்ணுகிறவன் என்னை அனுப்பினவரை அசட்டை பண்ணுகிறான் என்றார்.*

*அவர் பரிசேயர்களையும் வேதபாரகரையும், இஸ்ரவேலின் மதபோதகர்களை சபித்தார்.*

*லூக்கா 11:42-44, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ, நீங்கள் ஒற்தலாம் மருக்கொழுந்து முதலிய சகலவித பூண்டுகளிலும் தசம பாகம் கொடுத்து, நியாயத்தையும் தேவ அன்பையும் விட்டுவிடுகிறீர்கள்; இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விட்டுவிடாதிருக்கவேண்டுமே. 43. பரிசேயரே, உங்களுக்கு ஐயோ, ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும், சந்தைகளில் வந்தனங்களையும் விரும்புகிறீர்கள். 44. மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே, உங்களுக்கு ஐயோ, மறைந்திருக்கிற பிரேதக்குழிகளைப்போலிருக்கிறீர்கள், அவைகள்மேல் நடக்கிற மனுஷருக்கு அவைகள் தெரியாதிருக்கிறது என்றார்.*

*லூக்கா 11:46-47, அதற்கு அவர்: நியாயசாஸ்திரிகளே, உங்களுக்கு ஐயோ, சுமக்க அரிதான சுமைகளை மனுஷர்மேல் சுமத்துகிறீர்கள்; நீங்களோ உங்கள் விரல்களில் ஒன்றினாலும்*

***அந்தச் சுமைகளைத் தொடவும்மாட்டீர்கள். 47. உங்களுக்கு ஐயோ, உங்கள் பிதாக்கள் கொலைசெய்த தீர்க்கதரிசிகளுக்குக் கல்லறைகளைக் கட்டுகிறீர்கள்.***

***தன் பிள்ளைகளைத் துன்பப்படுத்தின மக்களை அவர் சபித்தார்.***

***லூக்கா 17:1, பின்பு அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: இடறல்கள் வராமல்போவது கூடாதகாரியம், ஆகிலும் அவைகள் எவனால் வருகிறதோ, அவனுக்கு ஐயோ!***

***அவர் யூதாஸை சபித்தார்.***

***லூக்கா 22:22, தீர்மானிக்கப்பட்டபடியே மனுஷகுமாரன் போகிறார், ஆனாலும் அவரைக் காட்டிக்கொடுக்கிற மனுஷனுக்கு ஐயோ என்றார்.***

***ரோமர் 12:19, பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்.***

*இது கர்த்தருடைய இருதயத்தை நொறுக்கும் காரியம். ஆனால் அவருடைய பரிசுத்தம் அதை கோருகிறது.*

*இது நமக்கும் இருதயத்தை நொறுக்கும் காரியம். ஆனால் கர்த்தருடைய மகிமையையே நாம் நாடுகிறோம்.*

***யோபு 31:29-30, என் பகைஞனுடைய ஆபத்திலே நான் மகிழ்ந்து, பொல்லாப்பு அவனுக்கு நேரிட்டபோது களிகூர்ந்திருந்தேனோ? 30. அவன் ஜீவனுக்குச் சாபத்தைக்கொடுக்கும்படி விரும்பி, வாயினால் பாவஞ்செய்ய நான் இடங்கொடுக்கவில்லை.***

***நீங்கள் யாரையும் சபிக்க வேண்டாம்.***
*நான் யாரையும் சபிக்கவில்லை.*

*நாம் தெய்வீக சாபத்தால் பின்னடைவான மக்களிடம் ஆசீர்வாத நற்செய்தியுடன் எதிர்கொள்ள அழைக்க பட்டிருக்கிறோம்.*

*உலகின் நிலையை பார்த்து நாம் மனம் உடைந்து போக வேண்டும்.*

*எரேமியா சொல்லுகிறார் சாபத்தின் பதில் நியாயத்தீர்ப்பு என அறிந்திருந்தாலும்,*

***எரேமியா 17:16-17, நானோ உம்மைப் பின்பற்றுகிற மேய்ப்பன், இதற்கு நான் மிஞ்சி நடக்கவில்லை; ஆபத்துநாளை விரும்புகிறதுமில்லையென்று நீர் அறிவீர்; என் உதடுகளிலிருந்து புறப்பட்டது உமக்கு முன்பாகச் செவ்வையாயிருந்தது. 17. நீர் எனக்குப் பயங்கரமாயிராதேயும், தீங்குநாளில் நீரே என் அடைக்கலம்.***

*துன்மார்க்கரின் மரணத்தில் பிரியப்படுகிற தேவன் அல்ல, நம்முடைய ஆண்டவரும் பிரியப்படுவதில்லை.*

*இயேசு எருசலேமுக்கு ஒரு சாபத்தை கூறி, அது அழிக்கப்படும் என்று சொன்னார், பின்னர் அதற்காக மனம்வருந்தி அழுதார்.*

*கர்த்தர் பரிசுத்தமானவர், நீதியுள்ளவர் என்பதால், அவர் பாவத்தைத் தண்டிக்க வேண்டும், அதற்காகவே சாபம் உள்ளது!*